## 11.25 மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்வு மானியத்தைப் பயன்படுத்துவதற்கான திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.138 நாள் : 9.8.2007

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி2) துறை, நாள் 3.7.2006
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.31787/2007/ பராஅ.2(2), நாள் 2.8.2007.

**ஆணை**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாவட்ட ஊராட்சிகளுக்கு அளிக்கப்படும் மாநில நிதிக் குழுவின் பகிர்வு மானியத்தை பயன்படுத்துதல் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2007–2008–ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் அரசின் முன்னுரிமை குறித்து விளக்கப்பட்டுள்ளதற்கேற்ப மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் மாநில நிதிக் குழு மானியத்தை பயன்படுத்தும்விதம் குறித்து திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்தது. மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் மாநில நிதிக்குழு மானியத்தை பயன்படுத்தும்விதம் குறித்து மேலே 1–ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குப் பதிலாக இனி கீழ்காணும் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது –

(1) மாநில நிதிக் குழு மானிய ஆண்டு ஒதுக்கீட்டில் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும் 10 விழுக்காடு அல்லது ரூ.15.00 லட்சம், இதில் எந்த தொகை குறைவோ அதனை நிர்வாக செலவினங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

(2) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைத்தல்.

(3) கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல் மற்றும் நேரடியாக தார்ச் சாலை அமைத்தல்.

(4) குடிநீர் பணிகள்.

(5) மாவட்ட ஊராட்சிகள் தங்களின் மொத்த மாநில நிதி குழு மானிய ஆண்டு ஒதுக்கீட்டில் 50 சதவீதத்திற்கு மிகாமல் இதரப் பணிகளை மேற்கொள்ளலாம்.

(6) ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பயன்பெறும் வகையில் பணிகளை தேர்வு செய்யலாம்.

(7) இத்தகைய பணிகளுக்கான இடத்தினை தேர்வு செய்யும் பொறுப்பு முழுமையும் மாவட்ட ஊராட்சியைச் சார்ந்ததாகும்.

(8) மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து, அரசாணை (நிலை) எண். 64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–2) நாள் 17.5.07–ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் காணும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், குட்டை, கால்வாய், வாய்க்கால், ஏரி ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மற்றும் தடை செய்யப்பட்ட அனைத்துப் பணி ஆணை இதற்கும் பொருந்தும்.

(9) மாநில நிதிக்குழு மானியத்தின் பங்கீடு மற்றும் பயன்பாடு பற்றிய வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு தேவைப்படும் மாறுதல்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

3. இவ்வாணையை அனைத்து ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தெரியப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்